செய்தி வெளியீடு எண்: 02-2017 நாள்: 01.12.2017

## விழுப்புரம் மாவட்டத்தில் புதியதாக தொடங்கப்பட்ட சட்டக்கல்லூரிக்கு ரூ.60.69 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

*****

விழுப்புரம் மாவட்டம் சாலாமேடு பகுதியில், புதியதாக தொடங்கப்பட்ட சட்டக்கல்லூரிக்கு ரூ.60.69 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (01.12.2017) அடிக்கல் நாட்டினார்.

விழுப்புரம் மாவட்டம் சாலாமேடு பகுதியில் 1.93.0 ஹெக்டேர் பரப்பளவில் சட்டக்கல்லூரி நிறுவப்பட உள்ளது. இதற்காக தனியாக மாணவ மாணவியர் விடுதி, கல்லூரி நிர்வாகக் கட்டடம், நூலக கட்டடம், கலையரங்க கட்டடம் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டு, சட்டக்கல்லூரி அமைக்கப்பட உள்ளது. சட்டக்கல்லூரி அமைப்பதற்காக இன்றைய தினம் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

முன்னதாக, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பாக அமைக்கப்பட்ட டாக்டர்.எம்.ஜி.ஆர். பல்நோக்கு உள் விளையாட்டு அரங்க கட்டடத்தினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற டாக்டர்.எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, இந்த பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசின் பொது திட்ட நிதியிலிருந்து ரூ.150.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.இரா.இலட்சுமணன் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2016-17ன் கீழ் ரூ.8 இலட்சமும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஏ.நவநீதகிருஷ்ணன் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2017-18ன் கீழ் ரூ.15 இலட்சமும் ஒதுக்கீடு செய்து அதன் மூலம் உள் விளையாட்டு அரங்கத்திற்கு மரச்சட்டங்களாலான தரை அமைக்கப்பட்டது. மேலும், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2017-18ன் கீழ் ரூ.10 இலட்சத்தில் சுற்றுசுவர் மற்றும் நடைபாதை அமைக்கப்பட்டது. இந்த

விளையாட்டு அரங்கில், இறகுபந்து, ஜூடோ, டேக்வென்டோ, கூடைப்பந்து விளையாடுவதற்கான வசதிகளும், பயிற்சியாளர் அறை, விளையாட்டுப் பொருட்கள் வைப்பறை, குளியளரை மற்றும் கழிப்பறை வசதிகள், தீயணைப்புக் கருவிகள், மின்சார உயர் விளக்கு மற்றும் குடிநீர் வசதிகள் அமைக்கப்பட்டள்ளது. இன்றைய தினம் இவ்விளையாட்டு அரங்கத்தினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்விழாக்களில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை, உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு, வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி, மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.ஞானசேகரன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சரஸ்வதி, விழுப்புரம் வட்டாட்சியர் திரு.சுந்தரராஜன், சட்டக்கல்லூரி முதல்வர் திரு.முருகேசன், முதன்மை தலைமை பொறியாளர் திரு.ஜெய்சிங், செயற்பொறியாளர் திரு.தனபால் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.